தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௫ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௰ வைகாசி, 1949—மே | மலர் ௨

திருவள்ளுவர் விழா.

திருவாளர் T. S. அவிநாசிலிங்கஞ் செட்டியார் அவர்கள் அறிவுரையால் இந்நாள் எழுந்துள்ள புத்துணர்ச்சியின் விளைவாகத் தமிழ்ப் பெருமக்களது ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் செல்வ மாகிய பொய்யா மொழித் **திருக்குறள்** பெரு நூல் பெரிதும் கொண்டாடப் பெற்றும், படித்து ஆராயப் பெற்றும், உணர்ந்து ஒழுகப்பெற்றும் வருகிறது. தமிழ்ப் பெருமக்களும் பிறரும், பிறப்பு, சமயம், அரசியல் கொள்கை முதலிய வேறுபாட்டுத் தடை யின்றி ஆசிரியர் பெருந்தகையார் **திருவள்ளுவர்** பெருமானையும் நாளும் நாளும் நினைந்து நினைந்து மகிழ்ந்து போற்றி வருகின்றனர். ஊர்கள் தோறும் பேரார்வத்தோடும் உண்மை உணர்ச்சியோடும் **திருவள்ளுவர் விழாக்** கொண்டாடி வருகின்றனர்.

இங்ஙனமே, கரந்தைத் தமிழ்ச் சங்கம், நாட்டார் தமிழ்ப் பேரவை, திராவிடர் கழகம் ஆகிய மூன்றின் கூட்டு முயற்சியால் 1949, மே, 2, திங்கட்கிழமை, தஞ்சை இராவ்

பகதூர் இராமநாதன் செட்டியார் மன்றத்தில், முத்தமிழ் வள்ளல் இராவ் பகதூர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமையில் **திருவள்ளுவர் விழா** மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

பல ஊர்களிலிருந்தும் தமிழ்ப்பெருமக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். குழுமிய பெருமக்கள் எல்லாருக்கும் இராவு சாகிபு திருவாளர் S. சுயம்பிரகாசம், B. A., B. L., அவர்கள் அன்பு ததும்ப வரவேற்புக் கூறினார்கள்.

தலைவர் அவர்களது பொருள் பொதிந்த அரிய முன்னுரைக்குப் பின், 'அறத்துப்பால்' குறித்து திரு. கோ. தியாகராசப் பிள்ளை, G. M. V. C., அவர்களும், 'பொருட்பால்' குறித்துத் திருவாளர் திருவாசகம் K. M. பாலசுப்பிரமணியம், B. A., B. L., அவர்களும், 'காமத்துப்பால்' குறித்து வித்துவான் திருவாளர் சி. இலக்குவனார், M. O. L., அவர்களும் விரித்துரைத்து சிறந்த சொற்பொழிவாற்றினார்கள்.

திருவாளர் R. ஏகாம்பரநாதன் அவர்கள் எல்லாருக்கும் நன்றி கூறினார்கள். **திருவள்ளுவர் விழா** சிறப்பாக நிறைவேறியது.

வெறுப்பின் மறுப்பு

நாவலர், இளசைகிழார், திரு. ச. சோ. பாரதியார், எம். ஏ., பி. எல்.,
பசுமலை.

'தமிழ்ப்பொழில்' துணர் உரு-இன் முதல் மலரில், பண்டிதர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் 'ஐந்திறம்' என்னும் கட்டுரையைக் கண்டேன். அதில், 'ஐந்திரம்' என வழங்கும் பனம்பாரர் பாயிரம் பாடம் தவறு எனவும், 'தொல்காப்பியர் தாம் செய்த நூலுக்கு 'ஐந்திறம்' என்றே பெயர் வைத்தனர்' எனவும் பண்டிதர் அவர்கள் தேர்ந்து தெளிந்த துணிபு சுட்டப்பட்டிருந்தது. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு' ஆகையால், அப் புது முடிபின் உண்மை உணர அக் கட்டுரையை ஆவலுடன் படித்தேன். அதில் பண்டித ரவர்களின் அருந்திறல் ஆராய்ச்சியை விருந்தென அருந்தும் வேட்கையால் எதிர்பார்த்த கொள்கை விளக்கப் படாமல், வீணாகப் பண்டித ரவர்கள் என்பாற் கொண்ட வெறுப்பும், நான் கூறாத கொள்கைக்கு மறுப்பும் எழுதியிருப் பது வியப்பை விளைத்தது.

'தொல்காப்பியர் தாம் அருளிச்செய்த நூலுக்குத் தொல் காப்பியர் எனத் தம் பெயரையே வைத்ததாக' என் உரைப் பாயிரத்தில் எழுதினேன் என்பது பண்டித ரவர்கள் என் மேல் ஏற்றும் முதல் குற்றச்சாட்டு. காப்பியர் என்பது தமிழகத்து வழங்கும் அரும் பழம் பெருநூ லியற்றியவரின்

இயற்பெயரே யன்றிக், காப்பியக் குடியினர் எனச் சுட்டும் காரணக் குறிப்புப் பெய ரன்று என்றும், அந்நூல் அவர் பெயரால் வழங்குகிறது என்றும் மட்டுமே என் கருத்தாக நான் எழுதினேன். 'தொல்காப்பியர் என்பதே இந்நூ லியற்றி யார்க்கு இயற்பெயரும், அவர் நூலுக்கு ஆகுபெயரும் ஆம்' என்பது மட்டுமே என் உரைப் பாயிரத்தில் நான் எழுதியது. தொல்காப்பியர் தாம் எழுதிய நூலுக்குத் தாமே தம் பெயரை வைத்தார் என்று யாண்டும் யான் எழுதவில்லை.

'தொல்காப்பியரே தம் பெயரால் இத் தமிழ்ப் பெரு நூலை இயற்றினர்' என்று பனம்பாரர் பெயரால் வழங்கும் அந் நூற் பாயிரம் இயம்புகிறது என்று பிறர் மதமும் சுட்டி யிருக்கிறேன். அதனால் அது என் கொள்கை யாகாமை தெளிவாகும்.

இனி, தாம் இயற்றிய நூலுக்குத் 'தொல்காப்பியர்' வைத்த பெயர் இன்ன தென்னத் துணியச் சான் றின்மை யாலும், தமிழகத்தில் அந்நூல் அவர் பெயரால் வழங்கி வருவதாலும், அவ் வழக்குப் பெயர் அந் நூலுக்கு ஆகு பெயராம் என்று கருதி, அதையும் எழுதினேன். அதற்கு எடுத்துக்காட்டும் நான் காட்டவில்லை என்பது பண்டித ரவர்கள் என்மேல் கூறும் இரண்டாம் குற்றம். இயற்றியவர் பெயர் அவர் நூலுக்கு ஆகுபெயரால் வழங்குவதற்கு எடுத்துக் காட்டு எதுவும் புலவர் வேண்டார். வள்ளுவர், கம்பர் எனும் புலவர் பெயர்கள் அவர் நூல்களுக்கு ஆகுபெயராய் வழங்கு வதை யாவரும் அறிவர். எனினும், அப் பெயர்களை அந் நூல்களுக்கு அப் புலவரே வைத்தனர் என் றெவரும் எண்ணார்.

இன்னும், 'ஒரு நூற்கு ஏற்ற பெய ரிடுவதும், அன்றி, அதை ஆக்கியோன் பெயரால் அழைப்பதுமே பழைய தமிழ்

வழக்கு' என்று நான் எழுதியதைப் பின்னும் ஒரு பிழை யெனப் பண்டிதர் கண்டிக்கின்றார். ஆக்கியோன் தன் பெய ரால் தான் இயற்றிய நூலை அழைப்பது வழக்கென நான் கூறவில்லை. 'அழைப்பது' என்ற பொதுப் பயனிலைக்கு முதலில் ஆக்கியோன் என்ற எழுவாயை ஏற்படுத்திக் கொண்டு, பிறகு அதைப் பண்டிதரவர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால், அவர்களே 'ஆக்கியோன் தன் பெயரையே தானி யற்றிய நூலுக்கு வைப்பது தமிழ் வழக்கென' நான் எழுத வில்லை என்றும் உடன்படுகிறார்கள். ஆயினும், அவ்வாறு நான் எழுதாததையும் என்மேல் மற்றுமொரு குற்றமாகக் கூறுகிறார்கள். நான் கூறாதவற்றைக் கூறியதுபோலக் கொண்டு, இல்லதைப் பொல்லதென எழுதுவது எப்படி யும் அவர்கள் வெறுப்பின் தப்புக் கூற விரும்பும் குறிப்பாவ தன்றி, என் குற்றமாகாது என வினயத்துடன் வற்புறுத்த விரும்புகிறேன்.

சுருங்கச் சொல்லின், என் உரைப்பாயிரக் கூற்றுக்களில் குற்றம் எதுவு மில்லை.

(1) முதலில், தொல்காப்பியர் என்பது தமிழில் வழங்கும் பெரும் பழ நூலை ஆக்கிய புலவரின் இயற்பெயர் என்பதென் துணிவு. அதைப் பண்டிதரவர்கள் மறுக்கவில்லை.

(2) இரண்டாவதாக, 'தொல்காப்பியர்' என்ற தமிழ்ப் பெயரைத் 'தொல்காப்பியம்' என வடமொழித் தத்திதப் பெயராக்கி, பழமையான 'கபி' யின் (சுக்கிரனின்) மரபினர், அரும் பழ நூலை ஆக்கிய பெருந் தமிழ்ப் புலவர் எனப் புனைந்த கற்பனை பொருந்தாப் புதுக்கதை என விளக்கினேன். அதுவும் பண்டிதரவர்கட் குடன்பாடென்றே தோன்று

கிறது. ஆனால், அக் கற்பனைக் கதையை முதலில் மகாவித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் புனைந்தது போலப் பண்டிதரவர்கள் கருதுகிறார்கள். பழைய உரையாசிரியர் அமண இளம்பூரணரும், பிந்திய ஆரிய உரைகாரர் அனைவருமே, தொல்காப்பியர் என்பதைத் தொன்மையான காப்பியக் குடிப் பிறப்பைச் சுட்டும் காரணக் குறிப்புப் பெயர் என்றே எழுதியுள்ளனர்.

(3) என் மூன்றாம் குற்றம், 'ஐந்திரம்' எனும் பாடப் பொருத்தத்தை நான் ஆராயவில்லை என்பது. ஆன்ற புலமை சான்ற பழைய முத் தமிழ் வித்தகர் அடியார்க்குநல்லார் முதல் தமிழறிஞர் யாவருமே இடையின 'ர' காரத்தொடு ஐந்திரப் பெயரைக் கடைப்பிடித்துக் கையாண்டு வருவதாலும், வல்லின் 'ற' காரம் சுட்டும் சான்று காணாமையாலும் நான் அவ் வாராய்ச்சியில் புகவில்லை. அதி லிறங்கி ஆழ்ந் தாய்ந்து துணியும் பண்டிதரவர்களின் முடிபுகளையும், அவற் றிற் கவர்கள் கூறும் ஏதுக்களையும் ஆதரவுகளையும் ஆராய் வோம்; தக்காங்கு பாராட்டுவோம்.

பிறப்பும் சிறப்பும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் 25, மலர் 1 பக்கம் 24.)

பிறப்பும் சிறப்பும்

பொதுமறை வகுத்த பொய்யாமொழிப் புலவர், மக்களாய்ப் பிறந்தார்க்கு ஒழுக்கம் குன்றப் பிறப்புக் கெடுமென அறிவுறுத்திய பின்னரும், பொறி யளவாக உணர்வுடையார் வடிவால் முழுதும் மக்களையே ஒப்பராயிருந்தும் மக்களாகார் எனத் தாழ்வு படுத்தி வரையறுத்து,

க. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

உ. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

ந. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

என உணர்த்தியது அறியற் பால தாகும். கொலை செய்யும் புலையர் தம் வினையின் கீழ்மையை அறியும் உணர்வில்லாது இழிஞரானதினுன், அன்னுரை மாக்கள் என்றும், கற்றதனு லாய பகுத் துணர்வு தினை யளவு மில்லாத மக்களை விலங்கு என்றும், சிறப்புடைச் செல்வ மாகிய கேள்வியை விரும்பாது, மன வுணர்ச்சி யின்றிப் பெருக வுண்டு ஊனுேக்கும் இன்பம் வேண்டி உழலும் விலங்கினைப் போன்று திரிபவரை மாக்கள் என்றும், வள்ளுவர், 'மாவும் மாக்களும் ஐயறி வுயிரே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இணக்கமாகவே இவ்வா றெல்லாம் தெரித்

துரைப்பா ராயினா ரென்பது ஈண்டுத் தெளிதற் பால தாயிற்று.

சிறப்புத் தரும் ஊக்கமும், சான்றாண்மைகளி னின்றும் வழுவாத பண்புடைமையும் ஒருவரிடத்து வாய்க்கப் பெறு தாயின், அவரும் மரத்தொடு பொருந்தியவ ராவ ரென,

க. உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

உ. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

என்ற வள்ளுவர் தம் வாய் மொழிகளான் ஒருவாறு உணரப்படும். உறுப் பொத்துப், பண்புடைமையும் உயர் குணமும் ஒவ்வாமையால் கயவர் மக்க ளல்லா ராயின ரென்பது,

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்.

என்ற பொய்யில் பொருளுரையால் அறியப்படும். அறியும் ஆற்ற லில்லாதும், அங்கணுளராச் சிறந்தவை செய்யாதும் பழி பாவத்திற்கு அஞ்சுவ தாகிய நாணம் போன்ற மன னுணர்வு இல்லாரும் மக்களாய் வாழ்கின்றன ரென்பது வாய்மை யாகா தென வள்ளுவர் கருதினா ரென்பதை,

க. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று.

உ. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

என்ற தண்டமிழ் வெண் குறள்களா னறிக. மற்றும் உலகிற்குப் பயன் படும்படி உள்ளத்தால் சிறப்பீனும் உயர் பொருளை யுள்ளி, செயலறிவால் சிறந்தவை செய்பவர் தாம் மக்களாய் வாழக் கடவ ரென்பதூஉம், அத் தகைய இயல்பிலார் தம் இழி குணத்தால் பொய்ம் மாய வீண்

இதன் தொடர்ச்சி 59 ஆம் பக்கம் பார்க்க.

ஐந்திறம்.

பண்டிதர். திரு. அ. கிருஷ்ணசாமி நாயடு, கோயமுத்தூர்.

(முற்றொடர்ச்சி துணர் 25, மலர் 1, பக்கம் 16.)

1. விண்ணவர் கோமான் விழுநூல்-தேவர் கோமான் இந்திரனால் செய்யப்பட்ட வியாகரணம்.

2. கப்பத் திந்திரன் காட்டிய நூல்- ஆயுள் கற்பத்தினை மிகவும் உடைய இந்திரன் தோற்று வித்த வியா கரணம்.

3. மெய்ப்பாட் டியற்கை-எம்முடைய அருககுமாரன் தோற்றுவித்த பரமாகமம்.

இந்திரன் அருளிச் செய்தது வியாகரண இலக்கணம். ஆகமம் — சாத்திரம். வியாகரணத்தில் சொல்வன வேறு; ஆகமத்தில் சொல்வன வேறு. ஆசிரியர் நல்லாரோ வியாகரணத் தினை ஆகமங்களில் காணலாம் என்கின்றனர். அவர் கூற்றுப் படி இலக்கண நூலில் சொல்லுவனவற்றை ஆகம நூல்களில் எங்ஙனம் காண முடியும்? அங்ஙனமே ஆகம நூல்களில் சொல்லுவனவற்றை இலக்கண நூல்களில் எங்ஙனம் காண முடியும்? அதுவும் முடியாது; இதுவும் முடியாது. ஆகையால்,

1. விண்ணவர் கோமான் விழுநூல்—தேவர் கோமான் இந்திரனுடைய தத்துவத்தைப் பற்றிச் சொல்லும் சிறந்த சாத்திரம்.

2. இந்திரன் காட்டிய நூல் — இந்திரனுடைய தத்துவத் தைக் காட்டிய சாத்திரம்.

3. மெய்ப் பாட் டியற்கையில் விளங்கக் காண்பாய்—எம் முடைய அருகதேவன் தோற்றுவித்த பரம ஆகமத்தில் இந்திரனது தத்துவங்கள் சொல்லப்பட்டிருத்தலைக் காண்பாய்.

என்பனவே சிலப்பதிகார அடிகளின் உண்மைப் பொருள்.

அருகதேவனைப் பற்றிச்சொல்லும் பரமாகமங்களில் எதிலேனும், ஐந்திர வியாகரணத்தைப் பற்றிச் சொல்லியுள்ளதா என்று எவரேனும் ஆராய்ந்தாரல்லர். ஆசிரியர் நல்லாரும் ஆராய்ந்தாரல்லர். கடவுளையும், கோயில்களையும் பற்றிச் சொல்லும் ஆகம நூல்களில் எழுத்தையும் சொல்லையும் பற்றிய இலக்கணங்களைச் சொல்லுவதற்கு இன்றியமையாமை இல்லை என்பதை அனைவரும் அறிவர்.

இளங்கோவடிகளின் எண்ணம்.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் அருகதேவனது பரமாகத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்ல வேண்டியவர், இந்திரன் முதலிய தேவர்களின் பெருமையைச் சொல்லும் ஆகமங்களைக் காட்டிலும், பரமாகமம் மேன்மை யுடையது எனச் சொல்ல வேண்டியது இன்றியமையாமை யாயிற்று. ஆகவே, இந்திரனது பெருமையைப் பற்றிச் சொல்லும் ஐந்திரம் என்னும் நூலில் உள்ள தத்துவங்களைப் பரமாகமத்தில் காணலாம் என்று சொல்லுவது இயற்கையே யாம். சமய நூல்கள் ஒவ்வொன்றும் பிற சமய நூல்களின் தத்துவங்களைச் சொல்லியும், அவற்றை மறுத்தும், தம் சமயத் தத்துவங்களை உயர்த்தியும் சொல்வதே கடமையாகக் கொண்டுள்ளன. அக் கடமையை நிறைவேற்றவே ஆசிரியர் இளங்கோவடிகள், 'கப்பத் திந்திரன் காட்டிய நூலின் மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்' என அருளிச் செய்வாராயினர். இந்திரனது பெருமையைக் காட்டிய நூலினை மெய்ப்பாட்டியற்கையில் விளங்கக் காண்பாய் என்பதுவே இளங்கோவடிகள் எண்ணம். இந்திரனைப் பற்றிச் சொல்லும் ஐந்திரத்தைப் படிக்கவேண்டாம்; பரமாகமத்தைப் படித்தால் ஐந்திரத்தில் சொல்லியுள்ள தத்துவங்களும், அதற்கு மேலாக அருகதேவன் தத்துவங்களும் காணலாம் என்பதே இளங்கோவடிகளின் இறுதியான எண்ணம்.

ஐந்திரம் ஓர் ஆகமம்.

இந்திரனது சமயத்தைப் பற்றிச்சொல்லும் நூல் ஐந்திரம். இந்திரனது மதத்திற்கு ஐந்திரம் என்பது பெயர்; ஐந்திரம் ஆறு வகைச் சமயங்களில் ஒன்று. அச் சமயங்களாவன :—ஐந்திரம்,

ஆக்கினேயம், கணபத்தியம், சைவம், வைணவம், சாக்ததம், என்பன. இவ் வறு வகைச் சமயங்களையும் அவற்றிற் குரிய நிலைகளிலே நிலைநிறுத்தியதால், சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு 'ஷண்மதஸ்தாபனுசிரியர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப் படுதல் காண்க. இதனுல் ஐந்திரம் ஒரு வடமொழி ஆகம நூல் என்று தெளிக.

மேலும், 'வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள், போர்ப்புறு முரசம் கறங்க' (புறம். 241) என வச்சிரத்தைக் கையிலுள்ள இந்திரன் கோயிலில் முரசவாத்தியம் முழங்க எனச் சொல்லப்படுவதாலும், 'வச்சிரக் கோட்டம்' என வச்சிராயிதத்தின் கோயில் வருவதாலும், 'இந்திர விழவு' என்ற திருவிழா நடைபெற்று வருவதாலும், தேவேந்திரனுக்குக் கோயில் அமைப்பதற்கும், பூசை, திருவிழா நடப்பதற்கு முரிய விதிகளைச் சொல்வதற்கும் ஆன ஒரு நூல் இருந்த தென்பதில் ஐய மில்லை. அத்தகைய நூல் ஐந்திரம் என்பதே யாம். இத் தகைய ஐந்திர ஆகமத்தையே ஆசிரியர் இளங்கோவடிகள் 'விண்ணவர் கோமான் விழு நூல்' என்றனர். இவ் வுண்மையை யறியாமல் ஐந்திர வியாகரண மென உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் அழிக்க முடியாத தவறு செய்து அருந் தமி மூலகத்தை யேமாற்றி விட்டனர்.

இவற்றைச் செவ்வனே ஆராய்ந்த ஆசிரியர் ந. சி. கந்தையா பிள்ளை, 'பாயிரத்தில் கூறப்படும் ஐந்திரம் என்பது ஐந்திர இலக்கணத்தைக் குறியாது. இலக்கணத்தைக் குறிக்குமோ எனக் கருத இட முண்டு' எனக் கூறுகின்றனர். இதனுல் இலக்கணத்தைக் குறிக்கும் என்பதைத் தொல்காப்பியனுர் அருளிச் செய்த ஐந்திறம் என்னும் இலக்கணத்தையே குறிக்குமெனக் கொள்க.

றகர ரகரப் பாடபேதம்.

பாடபேதம் என்பது நூலாசிரியர் எழுதிய எழுத்திற்கும், சொற்கும், வேருன எழுத்தும், சொல்லும், சொற்ருெடரும் சேர்ப்பதே யாகும். சேர்ப்பதற் குரிய காரணங்க ளாவன :—

1. நூலினைப் பெயர்த்தெழுதுவோர் தவருக எழுதி விடுதல்.

2. பொருள் விளங்கா விட்டால் நூலாசிரியர் பாடத்தை மாற்றி விடுதல்.

3. நூலாசிரியர் கொள்கையைத் தம் கொள்கைக் கியைந்த தாகச் செய்யப் பாடத்தைத் திருத்தி விடுதல்.

இத் தகைய காரணங்களால் பாட பேதங்கள் ஏற்படு கின்றன. கொள்கைகளைத் திருத்துவோருக்கு இரண்டு வழி கள் உள்ளன.

1. தாம் திருத்திய பாடம் ஏட்டுப் பிரதியில் உள்ள தென்று சொல்லுதல்.

2. தாம் திருத்திய பாடத்திற்குக் காரணம் காட்டுதல்.

இவற்றுள், ஏட்டுப் பிரதியில் உள்ள தென்றல் எளிதான வழி. இப்பொழுது யானே சொல்லுகிறேன். ஆழ்வார் திரு நகர் தாயவலம் தீர்த்த திருமேனி இரத்தின கவிராயர் எழுதிய 'ஐந்திர நுண் பொருள் விளக்கம்' என்னும் நூற் பிரதி யொன்று பூளைமேடு பாகவதர் மு. வேணுகோபாலசாமி நாயடு வீட்டில் இருக்கிறது என்ருல் யாவரும் நம்பிவிடுவர். அப் பிரதி யைக் காண்பிக்க வேண்டு மென்று கேட்பவர் யாவர்? கேட்கும் வழக்கமும் இல்லை. கேட்பினும் காண்பிக்க வேண்டு மென்ற நியதியும் இல்லை. இங்ஙனம் திருத்தி யச்சிடப்பட்ட பாட பேதங்கள் கொண்ட நூல்கள் எத்துணையோ உள்ளன. எனி னும், அவ்வழி எனக்கு வேண்டாம்.

இரண்டாவது வகையாகக் கொள்கைக் கியையப் பாடத் தைத் திருத்தும் பொழுது, நூலாசிரியரின் பாடம் இது தான் என்பதற்குப் போதிய காரணம் காட்டல் வேண்டும். அவ்வாறு தொல்காப்பியனுர் நூலில் திருத்தப்பட்ட பாடங்களில் இரண்டு சாலவும் சிறந்தன.

1. அகத்திணை யியல், 5 ஆவது சூத்திரத்தில், 'வருணன் மேய பெருமணல் உலகம்' என்றதில் 'வருணன்' என்பதை

'வண்ணன்' என்பதாக ஆசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L., திருத்தி, அதற்குத் தகுந்த காரணமும் காட்டி எழுதியுள்ளார்.

2. புறத்திணையியல், 32 ஆவது சூத்திரத்தில், 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்பதில் 'கந்தழி' என்பதைத் காந்தன் என்பதாக ஆசிரியர் S. சோமசுந்தர பாரதியார் திருத்தி, அதற்குப் போதிய காரணம் காட்டி நிறுவியுள்ளார். எனவே, தொல்காப்பியனார் தமது நூலுக்கு வைத்த ஐந்திறம் என்னும் பெயரே பின்னர் ஐந்திரம் என எழுதப்பட்டது.

பழைய ஓலைச் சுவடிகளில் வல்லின றகரத்திற்கும் இடையின ரகரத்திற்கும் வேறுபாடு காண்டல் அரிது! இவ் வறியா நிலையில் ஐந்திறம் என்பது ஐந்திரம் என எழுதப்பட்டிருந்ததில் வியப்பு இல்லை.

தொல்காப்பியனார் தமது நூலுக்குத் தொல்காப்பியம் என்றோ தொல்காப்பியர் என்றோ பெயர் வைத்தனர் என்று சொல்லுதல் ஒரு சிறிதும் பொருந்தாதென முன்னர் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அன்றியும், அகத்தியம் என்பதைப் போலத் தத்தித முடிவைப் பெற்றுத் தொல்காப்பியம் என்னும் பெயர் அமைந்திருக்கலாம் எனச் சொல்லுதல் தகாது என்பதற்காக, அகத்தியம் என்னும் நூலே அக் காலத்தில் இல்லை என்பதைச் சற்று விரிவாக ஆராய்ந்து தெளிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஐந்திர வியாகரணமே தொல்காப்பியனார் காலத்தில் இல்லை என்பதும், அதைப் போன்ற வட மொழி வியாகரணங்களும் தொல்காப்பியனார் நூலுக்கு முதல் நூல் அன்று என்பதும் செவ்வனே நிறுவப்பட்டுள்ளன.

ஐந்திறம் என்பது

ஐந்து திறம், ஐந்திறம்; ஐந்து, திணை, ஐந்திணை. ஐந்திணை என்பதைப்போல் ஐந்திறமும் ஐந்துவகைகளைக் கூறுவது. திறம் என்பது வகை, கூறுபாடு என்னும் பொருளுடையது. திறம் என்னும் சொல் தொல்காப்பியனாரின் பலப்பல சூத்திரங்களில் இருமுறை, மும்முறை வந்துள்ளது. இத் தகையன பல. அவற்றுள்

ஒன்ருகிய அகத்திணையியல் 41ஆவது சூத்திரத்திரத்தில் நான்கு முறை திறம் என்னும் சொல்லைத் தொல்காப்பியனுர் பெய்திருக்கின்றனர்.

ஐந்து திறமாவது:—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து வகை இலக்கணங்களாம். ஆனல், இப்பொழுது பதிப்பாகி வெளிவந்துள்ள தொல்காப்பியனுர் நூல், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று வகைகளாக வன்ருே உள்ளது? பாயிரத்திலும் 'எழுத்தும், சொல்லும், பொருளும் நாடி' என்று வந்துள்ளமையால், மூன்று பெரும் வகைகளாகவுள்ளதே ஏற்புடையது. எங்ஙனம் ஐந்து வகைகள் என்று கூறலாம் என்பது பெரிய வினு. இவ் வினு ஆசிரியர் நச்சினர்க்கினியர் திருவுள்ளத்திலும் தோன்றிற்று. தோன்றவே, சிறப்புப் பாயிரத்தில், 'தொல்காப்பியம் என்பது மூன்று உருப் படங்கிய பிண்டம்; பொருள் கூறவே, அப் பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமும் அடங்கிற்று' எனக் கூறுவதால், யாப்பிலக்கணம் என ஒன்று தனித்து எழுத்தும் சொல்லும் பொருளும் போல் தனித்த வகையில் அமைந்திருக்க வேண்டுமென அவருள்ளத்தில் உறுத்துதல் புலனுகிற தன்ருே? இங்ஙனமே ஆசிரியர் நக்கீரர் 'எழுத்தும், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம.' எனக் கவலைப் படுகின்றதால், யாப்பிலக்கணம் எனத் தனித்த தொன்று இருந்திருக்க வேண்டுமென்பதும் புலப்படுகின்ற தன்ருே. 'அக் காலத்தி லிருந்த புலவர் பலரும் யாப்பு நூல்கள் இயற்றினர். காக்கைபாடினியார், அவிநயனுர், மகேச்சுரனுர் முதலாயினுர் தத்தம் பெயர்களால் யாப்பிலக்கணங்கள் வகுத்தனர்' என்பதும் யாப்பிலக்கணம் தனித்து இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. தொல்காப்பியனுர் யாப்பிலக்கணம் என்பது செய்யுளியல் என்னும் வகையில் 244 சூத்திரங்கள் உள்ளது. இத்துணைச் சூத்திரங்கள் உள்ள செய்யுளியலைத் தனித்த அதிகாரமாகவோ படலமாகவோ அமைத்திருக்க வேண்டும். பொருட் படலத்தில் 696 சூத்திரங்கள் உள்ளன. அவை 9 இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப் பிரிவுகளில் ஒன்ருன செய்யுளியலில் 244 சூத்திரங்கள் இருக்கின்றன. படலம் என்ருல் செய்யுளியல் தனித்த படலமாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்ததாகும்.

இங்ஙனம் தனித்து யாப்புப் படலம் என உரையாசிரியர்கள் ஏன் வகுக்க வில்லை என்ருல், எழுத்துப் படலத்தில் 9 பிரிவுகளும் சொற் படலத்தில் 9 பிரிவுகளும் உள்ளனபோலப்,

பொருட் படலத்திலும் 9 பிரிவுகள் இருக்கவேண்டுமெனக் கருதினுர்கள் போலும். இதனுலே ஆசிரியர் நச்சினுர்க்கினியார் 'தொல்காப்பியம் என்பது மூன்றுறுப் படக்கிய பிண்டம்' எனக் கூறினர். எனினும், ஐந்துறுப்புகள் அடங்கிய தென்பதே அறிஞர்களின் கருத்து. ஆசிரியர் வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார், B. A., 'இனி, ஐவகை இலக்கணங்களாவன: எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி, என்பன. இவ் வைந்தனுள்ளே தொல்காப்பியத்தில் முதல் மூன்றை மட்டிலே விரித்துக் கூறுவர். செய்யுளியல் என்றதன்கண்ணே யாப்பை விரித்தோதியும் உவமவியல் என்றதன் கண்ணே அணியை எடுத்தோதியும் ஒராற்ருல் ஐவகை இலக்கணமும் கூறலாயினர்.' என்பதாராய்தற் குரியது. (தமிழ் மொழி வரலாறு பக்கம் 42)

தொல்காப்பியனுர் அருளிச் செய்த உவமவியலில் 37 சூத்திரங்களே உள்ளன. வருங்கால இலக்கண ஆசிரியன்மார் பலவகைப்பட்ட அணிகளையும் வகுத்து வகுத்துக் கூறுவதற்காக இவ் வுவமவியல் தொகுத்துக் கூறினுர், திருத்தொண்டத் தொகையிலிருந்து பெரிய புராணம் தோன்றினதைப் போலவும், நாரத முனிவன் கதைத் தொகுப்பிலிருந்து வான்மீக ராமாயணம் தோன்றினதைப் போலவும், இவ் வுவம வியலி லிருந்து பலவகை அலங்காரங்கள் தோன்றின. இவ் வுவம இயல் என்னும் சிறிய ஆலம் விதையிலிருந்து பலப்பல அணிகளாம் விழுதுகளுள்ள அணியிலக்கணம் என்னும் ஆலமரம் தோன்றும என்பதைத் தொல்காப்பியனுர் முன்னரே அகக் கண்ணில் அறிந்தவ ராவர். இங்ஙனம் தொல்காப்பியனுர் அறிந்துள்ளார் என்பதை யான் அறிவேன் என்று ஆசிரியர் வி. கோ. சூரியநாராயண சாத்திரி, B. A., கூறுவதாவது:— இப் பொருளணிகளில் பல, உவமம் என்ற ஓரணியின் அடியாகவே தோன்றின என்பது பல்லோர் துணிபு. ஆசிரியர் தொல்காப்பியனுர் இத் துணிபினர்

இது வடமொழியில் அப்பைய தீக்ஷிதர் அவர்களுக்கும் உடன் பாடாதல்.

'உவமம் என்ற தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதையம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே'

என்ற அவரது சித்திரமீ மாஞ்சைக் கூற்றினுல் விளங்கும் என்பதாம், (தமிழ் மொழி வரலாறு, பக்கம் 45)

இதனுல ஒல்காப் புலமைத் தொல்காப்பியனுர் உவமவியல் என்பது சிறிதாக உள்ளதேனும் தனித்த இலக்கணம் என்னும் வகையில் அமைக்கும் தகுதி வாய்ந்த தென்பதைத் திருவுள்ளங்

கொண்டனர். இங்ஙனம் கொண்டனர் என்பதற்குச் சான்ருக யான் உள்ளேன் என்று ஆசிரியர் தி. செல்வகேசவராய முதலியார், M. A., 'உலகில் வழங்கும் மொழிகள் எவற்றினும் உவமை ஒன்றே அடிப்பட்டு நடந்தியல்வது வெள்ளிடை விலங்கலாம். ஏனைய அவ் வொன்றில் நின்றே கிளைப்பன, இது பற்றியன்றே தொல்காப்பியனுரும் உவமவியல் ஒன்றே கூறிப் போந்தார்.' என்ருர். (தமிழ் பக்கம், 49), இதனுல் உவம வியல் என்பது உவமப்படலம் எனத் தனித்து வழங்கும் தகுதி வாய்ந்த தென்பதே தெளிவு.

ஆசிரியர் நச்சினுர்க்கினியர், 'தொல்காப்பியம் என்பது மூன்றுறுப்படங்கிய பிண்டம்' எனக் கூறினரேனும், 'யாப்பு' என்பது தனித்தமைக்கும் பெருமை வாய்ந்த தென்பதைக் கருதின ராவர். இன்றேல், பொருள் கூறவே, அப் பொருளைப் பொதிந்த யாப்பும் அடங்கிற்று எனத் தனக்குத் தானே சமாதானம் கூறமாட்டார்.

தொல்காப்பியனுர் அருளிச் செய்த நூலை எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்ருக அமைக்க வேண்டும் என்பதற்காக 'மூன்றுறுப் படக்கிய பிண்டம்' எனக் கூறிய ஆசிரியர் நச்சினுர்க்கினியரே,

''மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற் ரேன்று மொழிப் புலவரது பிண்டம் என்ப'' (செய்யுளியல், 172.) என்னும் சூத்திரத்தில் பிண்டம் என்பது மூன் றுறுப் படங்கியது. மூன் றுறுப்பாவன படலம், ஒத்து, சூத்திரம் என்பன. தொல்காப் பியம் என்பது பிண்டம். அதனுள், படலம், ஒத்து, சூத்திரம் எனும் மூன் றுறுப்புக்கள் வந்துள்ளன என விளக்கமாக எழுதி யுள்ளார். முன்னர் மூன் றுறுப் பென்பதற்கு எழுத்து, சொல், பொருள், என்னும் மூன்று அதிகாரங்கள் என்றும், பின்னர், மூன் றுறுப் பென்பதற்கு படலம், ஒத்து, சூத்திரம் என்றும் முன்னுக்குப் பின் முரணுக உரை யெழுதும் ஆசிரியர் நச்சினுர்க் கினியரின் உரையை உச்சி மேற்கொண்டு, தொல்காப்பியனுர் அருளிச் செய்த நூலை மூன் றுறுப் படக்கிய பிண்டம் எனப் பொருள் கொள்ளல் பொருந்தா தென்க. ஐந் துறுப்புக்கள் உள்ள ஐந்திறம் எனப் பொருள் கொள்ளலே பொருந்தும் என்க.

குறிப்பு :—தொல்காப்பியனுர் இயற்றிய ஐந்திறம் என்னும் நூலை மேற்கோளாகவும் தலைக் குறிப்பாகவும் கொண்டு ஆராய்ந்து எழுதி யுள்ள 'ஐந்திறமும் மக்கள் வாழ்க்கையும்' என்னும் நூலின் முகப்பில் இக் கட்டுரை உள்ளது. பழந் தமிழர் வரலாறு கூறும் அந்நூல் 250 பக்கங்கள் உள்ளது. விரைவில் வரும்.

இசைத் தமிழ்

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,
தேவார இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

---

5. ஐந்து அந்தரங்கள்.

பழந் தமிழ் நாட்டுப் பாணர் பெருமக்கள் குழலினின்றெழும் ஓசைக் கேற்ப நரம்புகளை யாழ்க் கருவிகளிற் கட்டித் தெறித்து, அதனத னோசைகளின் நுட்பம் யாவையும் நன்கறிந்துணர்ந்தவ ராவர், அவ்வா றமைவுறும் நரம்போசைகட் கேற்ப, காடுகளில் வாழும் விலங்கு பறவையி னோசைகளையும் உணர்ந்திருந்தனர். கருவிகளில் தார முதலாக நரம்புகள் கட்டியதால் இசை யோசைகளிடையே அமைந்த வேறுபாடுகள் பலவாகும், நரம்புகளின் அளவு வேறுபாடே ஏழிசை யமைதியை ஆக்குவதாகும். ஏழிசைகளின் பழைய வமைப்பு முறை: (க) தாரம், (உ) குரல், (ங) துத்தம், (ச) கைக்கிளை, (ரு) உழை, (சு) இளி, (எ) விளரி என்பதே யாகும். முத லிசை யாகிய தாரத்திற்கு, ஏதேனும் குறிப்பாக ஓரளவு நீளமான நரம்பைக் கட்டியதாகக் கொள்வோம், கருவியில் இந் நரம்பிற் பாதி யளவான தோர் நரம்பைக் கட்டித் தெறித்துக்கண்டால், முன்னைய நரம்பினோசையோடு ஒத்திசைக்கும் ஒரு வலி விசைத் தோன்றும். நரம்பின் பாதி யளவி னோசை வலிந்து ஒத்திசைப்பதுபோன்றே, நரம்பின் இரட்டித்த வளவி னோசையும், மெலிந்து ஒத்திசைக்கும் நீர்மையதாகும். ஆகவே, நரம்புகள் நீளத்திற் பெருகிச் செலல மெலிவிசையும், நீளத்திற் குறுகிச் செல்ல வலிவிசையுந் தோன்றுமென்பது புலனாகும். ஓரளவிற் பாதியை செம்பால் எனக் கூறுவர். குறித்த நரம்பில் தார மெனு மிசை ஒலித்தால், அந் நரம்பின் செம்பாலில் ஒலிக்கும் வலிவிசை மேற்றானத் தார மாகும். அதே போன்று குறித்த நரப்பின் இரட்டித்த வளவிற் பேசுமிசை மெலிவுத் தானத் தார மாகும், இம்முறையில் நின்ற மூன்

றிசைகளையுங் குறித்து இடை நின்ற ஏனைய இசைகளை வெற்றுக் கோடிட்டுக் காணுவாம்.

மெலிவு	சமன்	வலிவு
=	=	=
தாரம், –, –, –, –, –, –,	தாரம், –, –, –, –, –, –,	தாரம், –, –, –, –, –, –,

இவ்வா றமைவுற்ற இசையிடத்தையே மூவகைத் தான மெனப் பழந்தமிழர் கூறினர். தான மொன்றினி லமைந்த இசைகள் ஏழு ஆனதால், மூன்று தானத்திற்கும் இருபத்தொரு நரம்புகள் கொள்ள நேரிட்டது. இம் முறை மிக மிகப் பழைய பேரி யாழுக்கே உரியதாகும். இருபத்தொரு இசைகள் மூன்று கூறுக நிற்றலினுல், குறித்த முதனரம்பைச் செம்பாலாக்கி(பாதி) எட்டா மிசை கண்டதுபோல், முத னரம்பையே மூன்று கூறுக மடித்துக் கண்டதில், மூன்றி லிரு கூறு, நின்ற விசைக்கு ஐந்தா மிசை நரம்பாயிற்று. முதனரம்பு தாரம்; ஐந்தாம் நரம்பு உழை. மெலிவுத்தான உழை நரம்பின் செம்பா லளவு சமன் தான உழை நரம்பாகவும், அந் நரம்பிற் பாதி யளவு வலிவுத்தான உழை நரம்பாகவும் அமையும்.

மெலிவுத்தான உழை நரம்பின் முழு நீளத்தை மூன்று கூறுக்கி, இரு கூறு கொள்ள, உழைக் கைந்தாம் நரம்பாகிய சமன்தானக் குரல் நரம்பாகும். இந் நரம்பின் இரட்டித்தவளவு மெலிவுத்தானக் குரல் நரம்பாகவும், இந் நரம்பின் செம்பா லளவு வலிவுத்தானக் குரல் நரம்பாகவும் ஆகும். மெலிவுத்தானக் குரல் நரம்பின் நீளத்தை மூன்று கூறுகக் கொண்டு, இரு கூறு எடுக்க, அந் நரம்பு மெலிவுத்தான இளி நரம்பே யாகும். இதனைச் செம்பாலாக்க சமன்தான இளி நரம்பும், அதன் செம்பால் வலிவுத்தான இளி நரம்பும் ஆகும்.

மெலிவுத்தான இளி நரம்பின் நீளத்தில் மூன்றி லிரு கூறு சமன்தானத் துத்த நரம்பாகும். இந் நரம்பின் இரட்டித்த வளவு மெலிவுத்தான துத்த நரம்பாகவும், குறித்த அளவிற் பாதி வலி வுத்தானத் துத்த நரம்பாகவும் ஆகும், சமன்தானத் துத்த நரம்

பின் மூன்றி லிரு கூறு சமன்தான விளரி நரம்பே யாகும். முற்கூறிய ஏனைய நரம்புகள் போன்று இவ் விளரி நரம்பின் இரட்டித்த அளவு மெலிவுத்தான விளரி நரம்பாகவும், பாதி யளவு (செம்பால்) வலிவுத்தான விளரி நரம்பாகவும் ஆகும். சமன்தான விளரி நரம்பின் மூன்றி லிரு கூறு வலிவுத்தானக் கைக்கிளை நரம்பாகி, அதனி னிரு மடங்கு அளவு சமன்தானக் கைக்கிளை நரம்பாகி, அதனினும் இரட்டித்த அளவு மெலிவுத்தானக் கைக்கிளை நரம்பாகும்.

கைக்கிளை நரம்பை மூன்றி லிரு கூறுக்கிக் கண்டால், ஒலிக்கின்ற ஓசையானது, முன்னர்க் கூறிய ஏனைய ஆறு நரம்போசைகள் ஒற்றுமைப்பாடா யுடையதுபோ லல்லாது ஓசை கூடிவிடும் நீர்மைய தாகும். எழுத்தளவிலும், சொல்லளவிலும் கைக்கிளைக் கைந்தாமிசை தாரம் எனக் கூறலாம். ஆனால், நரம்பின் வழித் தோன்றும் ஓசை யளவிலோ, அவ் வோசை தாரத்திற்கும் குரலிற்கு மிடையே நிற்கு மோரோசை யாகும். இவ் வோசையையே, இடைவெளியோசை யெனும் பொருள்பட அந்தரம் எனக் கூறினர். இதன் நுட்பமே முத்தமிழ்த் துறைபோகிய முனிபுங்கவராம் இளங்கோவடிகளால், சிலப்பதிகாரம் யாழாசிரிய னமைதியில், வன்மையிற் கிடந்த தார பாகமும், மென்மையிற் கிடந்த குரலின் பாகமும், மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ள எனக் கூறப் பட்டுளது. இதன் பொருள் கைக்கிளையின் கிளை நரம்பு (மூன்றி லிரு கூறு) தாரத்திற்கும் குரலிற்கு மிடையே நிற்கு மென்பதே யாம். நின்ற விசைக் கைந்தாமிசையைக் கிளை யெனக் கூறுவது தமிழ் வழக்கே. அவ் விசைக் குரிய நரம்பும் கிளை நரம் பெனப்பட்டது.

நரம்பி னளவு முறையை எழுத்தளவில் அட்டவணைப் படுத்துவாம்.

முதலிசைகள் மெலிவு.	கிளையிசை அல்லது கிளை நரம்பு.	நரம்பின் முழு நீளம்.	செம்பால்	செம்பாவிற் பாதி வாரம்.	மூன்றிலிருகூறு.
தாரம்	உழை	,,	சமன்த் தாரம்	வலிவுத் தாரம்	உழை நரம்பு.
குரல்	இளி	,,	சமன் குரல்	வலிவுக் குரல்	இளி நரம்பு.
துத்தம்	விளரி	,,	சமன் துத்தம்	வலிவுத் துத்தம்	விளரி நரம்பு.
கைக்கிளை {	புதிய விசை தா (அந்தரம்) கு	,,	சமன் கைக்கிளை	வலிவுக் கைக்கிளை	அந்தர நரம்பு.
உழை	குரல்	,,	சமன் உழை	வலிவு உழை	குரல் நரம்பு.
இளி	துத்தம்	,,	சமன் இளி	வலிவு இளி	துத்த நரம்பு.
விளரி	கைக்கிளை	,,	சமன் விளரி	வலிவு விளரி	கைக்கிளை நரம்பு.

நரம்பின் முழு நீளத்திற் பாதியைச் செம்பால் எனக் கூறியது போன்று, செம்பாலிற் செம்பா லளவை, அஃதாவது, நீளத்தில் நான்கி லொரு கூற்றை வார மெனக் கூறுவதும் பழைய வழக்கே. நரம்பின் நீளக் கணித முறைகள் நம் தமிழ் நாட்டில் யாழ்க் கருவிகள் வழக்கிலிருந்த காலத்தே யிரம்ப இருந்திருக்கக் கூடும். பின்னர்த் தோன்றிய கருவிகளில் குறித்த நரம்பைக் கட்டி, அதன் கூறுபாட்டிற் கேற்ப இடையில் மெட்டுகள் அமைத்து விட்டபடியால், தனித்த நரம்பள விலக்கணங்கள் வழக் கொழிந்தன போலும், நரம்புகளைத் தனித்தனியே கட்டியது யாழ்க் கருவிகளெனக் கூறியதால், ஒரு நரம்பினிடையே மெட்டுகள் வைத்தது வீணை யெனக் கூறப்பட்டது. அருண்மிகு விபுலானந்த அடிகளார் கூறிய நரம்பளவின் முறையைக் கூறி, அந்தரத்தின் விரிவையுங் கூறுவாம்.

விசு வாண்டுத் தமிழ்ப் பொழிலிற் காட்டிய பேரியாழின் நரம்பின் அமைதியின் சுருக்கம், வருமாறு :

தார நரம்பிற் கைந்தாம் நரம்பாகிய உழை நரம்பே கிளை நரம்பாகியது. உழை நரம்பிற் கைந்தா நரம்பாகிய குரல் நரம்பு கிளையின் கிளையாகியது. இதனைக் கிளை யிருகோடு எனவும் கூறுவர். குரல் நரம்பிற் கைந்தாம் நரம்பாகிய இளி நரம்பு கிளையின் கிளையின் கிளையாக, கிளை முக்கோடு எனப் பெயரும் பெற்றது, இளி நரம்பிற் கைந்தாம் நரம்பாகிய துத்த நரம்பிற் குக் கிளை நாற்கோடு எனும் பெயரும், துத்தத்திற் கைந்தாம் நரம்பாகிய விளரி நரம்பிற்குக் கிளை யைங்கோ டெனும் பெயரும், விளரிக் கைந்தாம் நரம்பாகிய கைக்கிளை நரம்பிற்குக் கிளை யறுகோ டெனும் பெயரும் உண்டு. கைக்கிளைக் கைந்தாம் நரம்பே தாரத்திற்கும் குரலிற்கு மிடையே தோன்றிய அந்தர மாகும்.

புதிய இடைவெளியிசை யெனும் அந்தரத்தைக் கண்ட பழந் தமிழர், அந்தரத்தையும், தாரம், குரல் போன்று அளவு படுத்திக் கண்டனர். அம் முறையில், குரல் நரம்பிற்கும் துத்த நரம்பிற்கு மிடை நின்ற அந்தரமும், துத்த நரம்பிற்கும் கைக்கிளை நரம்பிற்கு மிடை நின்ற அந்தரமும், உழை நரம்பிற்கும் இளி நரம்பிற்கு மிடையே நின்ற அந்தரமும், இளி நரம்பிற்கும் விளரி

நரம்பிற்கு மிடையே நின்ற அந்தரமும் ஆக நான்கும், தாரம் குரல் நடுவே முதன் முதலாகத் தோன்றிய அந்தரமுஞ் சேர்ந்து **ஐந்து அந்தரங்க ளாயின,** இம் முறையில், கைக்கிளைக்கு முழைக் கும், விளரிக்குந் தாரத்திற்கு மிடைவெளி யிலாத நுட்பமும் அறியப்பட்டது. இதன் தன்மை நரம்பினளவு முறையாற் பட்டதாகும். அந்தரங்களை மட்டுமே இசைத்துக் காண ஏழிசைக்கு முற் றேன்றிய ஐந்திசை முறையே மீண்டும் தோன்றியது. இங்கு ஏழிசையோடு அந்தரங்க ளைந்தையும் கூட்டிக் காணப் பன்னிரண்டு இசையிடங்கள் அறிய வாய்ப் பேறப்பட்டது. ஏழிசைகளோடு அந்தரங்கள் இவ்வா றமைவன: (க) **தாரம்,** அந்தரம், (உ) குரல், **அந்தரம்,** (ங) **துத்தம்,** அந் **தரம்,** (ச) **கைக்கிளை,** (ரு) உழை, **அந்தரம்,** (சு) இளி, **அந் தரம்,** (எ) **விளரி.** இதனை ஒன்றன் பின் னென்றாகப் பன்னிரு கோட்டினு ளடக்கி அட்டவணைப் படுத்துவாம்.

அந்தரங்களின் முதலெழுத்துக் குறியீடு.

௧	தா	அ	கு	அ	து	அ	கை	உ	அ	இ	அ	வி
௨	அ	கு	அ	து	அ	கை	உ	அ	இ	அ	வி	தா
௩	கு	அ	து	அ	கை	உ	அ	இ	அ	வி	தா	அ
௪	அ	து	அ	கை	உ	அ	இ	அ	வி	தா	அ	கு
௫	து	அ	கை	உ	அ	இ	அ	வி	தா	அ	கு	அ
௬	அ	கை	உ	அ	இ	அ	வி	தா	அ	கு	அ	து
௭	கை	உ	அ	இ	அ	வி	தா	அ	கு	அ	து	அ
௮	உ	அ	இ	அ	வி	தா	அ	கு	அ	து	அ	கை
௯	அ	இ	அ	வி	தா	அ	கு	அ	து	அ	கை	உ
௰	இ	அ	வி	தா	அ	கு	அ	து	அ	கை	உ	அ
௰௧	அ	வி	தா	அ	கு	அ	து	அ	கை	உ	அ	இ
௰௨	வி	தா	அ	கு	அ	து	அ	கை	உ	அ	இ	அ

இவ்வாறு அமைந்த அட்டவணைகளையும், இக் கட்டுரையில் வரும் சில சொற்கள் முறைகளையும் படித்துணரும் இசை யறி புலவோர்கள் பல்லாருக்கும் ஏதோ மலைவாகத் தோன்றினும் தோன்றக் கூடும். அத் தகைய பெருந்தகையார் யாவருக்கும் நாம் மிகத் தாழ்மையுடன் அறிவித்துக் கொள்வது, இசைத் தமிழ் நுட்பங்கள் யாவையும் தமிழ் முறையாலேயே அறிய வேண்டுமென்பதே யாம். பன்னெடுங்காலமாக மறைந்திருந்த இசைத் தமிழின் அடிப்படையான அரிய பெரிய கருத்துகள் யாவும் நமது பெரும் பேராசிரியர் அருண்மிகு விபுலானந்தப் பெருந்தகையார் அவர்கள் யாழ் நூலிலே பெருகக் கூறியுள்ளார்கள். . அந் நூலினுள் அமைந்து கிடக்கும் ஒவ்வொரு பகுதியினையும் நன்கு பழைய முறையில் காணுவதே கடமையாகும். மேலும், இசைக் கலை முறை யாவும் சிறந்த கணித முறை யென்பதையும் மறத்தல் கூடாது. மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளும் எனும் பகுதியைக் கணித முறையாற் கண்ட பேரறிவாளர் எமது விபுலானந்தப் பெருந்தகையே தான். அன்னாருடைய இசைத் தமிழ்த் தொண்டுக்கு நாமும் நமது நாடும் என்றென்றும் கடமைப் பட்டவர்களாவோம். தமிழ்ப்பொழில் வாயிலாக வெளியிடும் எமது இசைத் தமிழ்க் கட்டுரையைப் பொறுமையுடனும் கூர்ந்தும் காணுவோருக்கு, உண்மை யிசைத் தமிழ் நுட்பம் யாவும் நன்கு விளங்கு மெனவே மீண்டுமொரு முறை மிகத் தாழ்மையுடன் அறிவித்துக் கொள்கின்றும்.

இசைத் தமிழ்ப் பாடல்.

4. மூத்தபிள்ளையார் வணக்கம். (யாழ்நூற் கடவுள் வணக்கம்)

இசையாளர் (சங்கீதம்) ப. சுந்தரேசன், கும்பகோணம்.

(முற்றொடர்ச்சி துணர் 25, மலர் 1, பக்கம் 32.)

பண்.—சங்கராபரணம்.] முதலடி [தாளம் ஆதி—எட்டு எண்கள்.

1.	; சரீ கமா ரிகரீ கரிசா	; ச கா ரி சா	ச நி த நி சா ;	‖
	; உழை யிசை யிபம் எ , ன,	; உ ரு வு கொள்	ப , ர , னே ;	‖
2.	; சரீகமா ரிககரி கரிசநி	; ச கா ரி சா	ச நி த நி சா ;	‖
	உழையிசை யி , பம் எ , ன்,	; உ ரு வு கொள்	ப , ர , னே ;	‖
3.	; சரீகமா ரிகமப க ரி சா	; ச கா ரி சா	ப ம க ரி க ரி ச ரி	‖
	உழையிசை யி , ப, மெ , ன	; உ ரு வு கொள்	ப , , , ர , னே ,	‖
ச நி	சரீகமா பாபா பாபா	; , ரி க ம பா	ப ம த ப ம க க ரி	‖
, ,	உமைதிரு வு ள நிறை	; , அ மி ழ் து கு	ம , , , ழ , லே ,	‖
ச நி	சரீகமா மபதா , பபா	; , ரி க ம பா	ச் நி த ப ம க க ரி	‖
, ,	உமைதிரு வு , ள , , நி றை	; , அ மி ழ் து கு	ம , , , ழ , லே ,	‖
ச நி	சரீகமா மபச்நி தபபா	; க மபத க்ரி	ச் நி த ப ப ம க ரி	‖
, ,	உமைதிரு வு , ள , நி , றை	; அ மி ழ் து ; கு,	ம , , , ழ , லே ,	‖

ச நி ‖ = 'உழையிசை'

௮

; ம பா கமப தாநீ ச்ரா ச்ரா | ; ச்ரா ச்சா | ச்நிதநிச்ரா ; ||
; மொ ழி யு , ரை கு ழ வி யை | ; அழ கறி | வி , ள , மை ; ||

; ம பா கமப தாநீ ச்ரா ச்ரா | ; ச ரீ நி ச்ரா | ச்நிதபத நிச்ரா ||
; மொ ழி யு , ரை கு ழ வி யை | ; அ ழ க றி | வி , ள , மை , , ||

; ம பா கமப தாநீ ரீ ச்ரா | ; ச்ரீ க்ரீ | ச்நிதபதநி ச்ரா ||
; மொ ழி யு , ரை கு ழ வி யை | ; அ ழ க றி | வி , ள , மை , , ||

; ம பா கமப தாநீ ரீ ச்ரா | ச் ரி க்ம் க்ரி ச் நி | க ரி ச் நி தப தா ||
; மொ ழி யு , ரை கு ழ வி யை | அ , ழ , க , றி . | வி , ள , மை , , ||

; ச் ரீ நி ச்ரா ச்நிதப கமபா | ; ச் நீ த பா | கமப த ப மகரி ||
மு ழு தி யல் வ , ர , த , னே | , மு றை மு றை | ப , ணி , வா , , , ||

சநி ச் ரீ நி ச்ரா ச்நிதப கமபா | க் ரி ச் நி ச்நிதப | தபம கப மகரி ||
, ம் மு ழு தி யல் வ , ர , த , னே | மு , றை , மு , றை | ப , ணி , வா , , , ||

சநி ச் ரீ நி ச்ரா ச்நிதப கமபா | க் ரி ச் ரி ச்நித ப | கமபக மகக ரி ||
, ம் மு மு தி யல் வ , ர , த , னே | மு , றை மு , , றை , | ப , , ணி , , வா , ||

சநி
, ம் || = 'உழையிசை'

கடையடி

; ச ரீ க மா ரி க ரீ க ரி சா	; ச ரீ க ரீ	க ரி ச நி சா ; ‖
; பு ழை செ றி க , ழை , குழல்	; இ சை பொ ழி	பொ , தி , யம் ; ‖
; ம பா ம கா ம ப தா , ம பா	; ரி க ம பா ,	ப ம ம க க ரி ச நி ‖
; பு க ழு ற வ , ள , கு று	; பு ல ம கள் ,	ப , னு , வ , , ல் ‖
; ம பா க ம ப தா நீ ச்ரி சா	ச்ரிக்ம்க் ரிச் நி	க்ரிச்நி தப தா ‖
; இ ழை ய , ணி தமிழ் ம , கன்	ள , ம , து , ள ம்	உ , , றை , யும் ‖
; ச்ரீ நிச்ா ச்நித ப க ம பா	க் ரிச்ரி ச்நித ப	க ம ப க ம க க ரி ‖
; இ றை ம கள் இ , சை , யி , யல்	வ , , ள , , மு று	கெ , , ன , , வே , ‖

ச நி
, ; ‖ = 'உழையிசை'

(40 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

மயக்கங்களில் உழன்று, தாமும் கெட்டு, அலறும் அலகை போல்வா ரென்று,

> உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
> தலகையா வைக்கப் படும்.

என்ற செய்ய பொய்யா மொழியான் விதந் தோதுவா ராயினர், வள்ளுவப் பெரியார். இத் தகையவாறு பல் வகையான் தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர், ஆற்றல் சான்ற தம் நூலின்கண், வெண் குறளால் பல இயல்களில் வாழ்க்கைத் துறைகளை நன் காய்ந்து, முற்படக் கிளந் தெடுத்து இயம்புகின்றதை நோக்குழி, மன னுணர்வு கொண்டு மக்களாய்ப் பிறந்தா ரனைவரும் ஐம் பொறிகளின் வய மயங்கிப், பய னின்றி இறப்பதற்கே காரணமா யல் லாது, சிறப்புக் கருதி அவர்தம் பாத் திறனின் நுட்ப மறிந்து சீரிய வாழ்க்கைத் திறனடைதல் சாலவும் நேரிது.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பது சீரிய ஒழுக்கத்தாற் பெறப்படுதலால் ஒழுக்கத்தா லெய்தும் சிறப்பும் பயனும் வகையும் யாவரு மடைய,

> ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
> முயிரினு மோம்பப் படும்.

என்ற பொய்யா மொழியில் 'ஒழுக்கம் விழுப்பந் தரலான்' என முதற்கண் பொதுப் படக் கூறி, இம்மைச் சிறப்போ டமையாது மறுமைச் சிறப்பாகிய ஞான நிலையினையும் நல்கும் அவ் வொழுக்கம் என புலப்பட, இனிமையும் அமைதியும் அழகும் விரவி யமையும் மென்மை தோன்றும் படி ஆசிரியர் வள்ளுவர் 'ஒழுக்கம்' எனப் பின்னுங் கூறி யருளிய நயப் பாட்டியல்பின் மாட்சியும் நீட்சியும் நன் குணரற் பாலது. மற்றும், 'சிறப்பீனுஞ் செல்வம் பெறினும்' என்ற விடத்துச் சிறப்பினை யோக மென்றும், 'சிறப் பீனும் செல்வமு மீனும்' 'சிறப் பென்னும் செம் பொருள்' என்ற பகுதிகளின் உரைக்கண் சிறப் பென்னும் மொழிக்கு வீடு என்றும் உரை பகர்ந்தார் பரிமேலழகர். சிறப் பென்னும் மொழி இப் பொருட் டாதல், 'சிறந்தது பயிற் றல் இறந்ததன் பயனே' என்னும் தொல்காப்பியத்தா

ணுணரப்படும். பிறப்பு இறப்புகளைப் பிறவு இறவு என்றுர் போன்று ('பிறவி னேடிறவு மாணுன்' என்பது தமிழ் மறை), சிறப் பென்னும் மொழி 'சிறவு' என்றும் 'சிறை' என்றும் வழங்கலாயிற்று. 'சிறவே போற்றி', 'சிறவே செய்து வழி வந்து' என வரும் திருவாசகத்தில் 'சிறவு' எனும் மொழியை, 'சிறப்பு', 'சிறந்த செயல்' என்ற பொருள்களில் மணிவாசகர் பெய்து வைத்திருத்தலும், 'சிறை யகத்திருந்த் கவுந்தி' என வரும் சிலப்பதிகாரத்தின் கண் இளங்கோவடிகள் 'சிறை' எனும் மொழியைத் தவம் எனும் சிறப்புப் பொருளிற் சொற்பொருள் ஆற்றலும் கருத்தும் நயமும் தோன்ற எழிலுறப் பெய்திருத்தலும் ஈண்டு நினைவு கூர்ந்து தெளிதற் பாலனவே. உலகின்கண் உயர்ந்தது, பிறவி வேட்கை வலையில் ஒருப் படாத பெருமையே யாதலின், சிறப் பென்னும் தவம் செய்யாதார் இம்மை யின்ப மின்மையால் சிறுமை எய்துவர். மற்றும் தவத்தால் உலகக் கட்டறுத்து வீடு பேற்றை அடைபவர் மக்க ளென்றும், அவ்வாறு வீடு பேறு குறியாதும், பிறப் பறுக்க முயலாதும் செல்வத்தைக் குறித்து தவம் செய்வார் மாக்களே யாவ ரெனவும்,

'தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
வாறுசெல் வருத்த மகல நீக்கி'

எனப் பொருநராற்றுப்படை வரிகளுக்கு ஆசிரியர் நச்சி ஞர்க்கினியர் உரை கூறு முகத்தான் தெள்ளிதாகின்றது. மற்றும் சிறந்தது பயின்று, அளிக்கவும் அழிக்கவும் வல்ல ஆற்றலைத் தவ முயற்சியான் எய்திய நீத்தார் செயற்கரிய செய்தலாற் பெருமைக் குரிய ரென்பது,

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்ற குறட்பாவால் வலி பெறுதல் காண்க.

இத் தகையவாறு சிறந்தது பழகும் நீடிய சடையோ டாடாத் திரு மேனியும் தெளிவு முடையார் தமிழகத்தில் விளங்கி யிருந்தது தவ வரலாற்று ஈறு நிகழ்ச்சி தெரிக்கும்

சங்க நூல்களில் துணியப்படும். தானத்தின் மிக்க தவத்தின் மாட்சியில் தலைசிறந்து நின்றோர தியல்பு,

‘சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்
பலஉடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்’

என்றதால் நன்கு விளங்கப் புலனுதல் கண்டு கொள்ளப் படும். தவத்திற் குரிய இத் தகைய ஆற்றல் நிறைந்து துவரத் துறந்ததினுன் வேண்டிய வேண்டியாங் கெய்தும் தன்மையும் வாய்ந்தாரைக் காணும் பேறுடையாரும், அவர்தம் ஆணை வழி நடப்பாரும் நலன் பல எய்துவா ரென்பதில் ஐய மிலை. விழுத்தவ முதல்வர் சேரமான் கருவூ ரேறிய ஒள் வாட் கோப்பெருஞ் சேரலிரும் பொறையைக் கண்டு பய னெய்திய ஒருவர், ஏது காரணத்தாலோ, தம் மேனி வேறுபட்டு நொந்திருந்த நரி வெரூஉத்தலையா ரென்னும் புலவரை நோக்கி ‘பிறவிதனை அற மாற்றிப் பிணி மூப்பின்றி தவ வாழ்வினையுடைய ராய சேரமானது காட்சி யளவே, உடல் வேறுபாட்டை மாறு படுத்தும்’ என அவரைச் சேரமான்பால் ஆற்றுப்படுத்தவே, புலவர், மெய்யுணர்வில் மேஎய் நின்ற விழுமியோரைக்கண்டு,

‘எருமை யன்ன கருங்கல் விடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும’!

என விளிக்க, தம் முடல் வேறுபாடு நீங்கி, நல் லுடம் பெய்திடவே, சேர மன்னனது தவ விழுத் திறனை வியந்து செயற் கரிய செயல்கள் நிகழ்த்தி எல்லா வுயிர்களும் நல்லா ரெனத் தொழ யாவருக்கும் பயன் படுமாறு,

அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்

குழவி கொள்பவரி னோம்பு மதி
யளிதோ தானே யது பெறலருங் குரைத்தே [புறம்-5]

என மகிழ் பூத்துச் செவி யறி வுறுத்திய திறன் உளமாரப் போற்றற் குரியது.

தென்னன் நன் னாட்டின்கண் பிசிர் எனும் ஊரகத்தே வாழ்ந்த ஆந்தையா ரென்ற தவப் புலவர் நரை திரை பிணி துன்ப மின்றி பன் னெடுங் காலம் உயிர் வாழ்ந்து தவத்தான் மாட்சிமைப்பட்ட திறனும் (புறம்-191) பிசிராந் தையார் பொருப் பன் நாட்டிலும் கோப்பெருஞ் சோழன் சோழ நாட்டின் உறையூரின் கண்ணும் ஒருவரை யொரு வர் சேய்மை பட வாழ்ந்தவ ராயினும்,

'பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய வாயினுந் தொடையுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப (புறம் 218)

என்றவாறு உணர்ச்சி யொத்துப் பிசிராந்தையார் கோப் பெருஞ் சோழனோடு பிணித்த நண்பினராய்த் திகழ்ந்து, தவ முதிர்வால் மரு ணீங்கி மாசறு காட்சியராய், ஞான அருள் நிலைப் பேற்றில் விளங்கியதும், தமது உயிர் நண்பன் கோப்பெருஞ் சோழன் துவரத் துறந்து உயிர் நீத்தற்கு ஒருப்பட்டு வடக் கிருந்ததைத் தமது தவ வலியால் உடன் அறிந்துகொண்ட துனியில் தூய ஞான வொளியாலாய காட்சியும், மற்றும் தமது நண்பன் துணிந்து கூறிய சொல் பழுதுறுவண்ணம் மன்னன் செயலில் கலந்துகொண்ட இவரது தீரத் துறந்த துறவு நிலையினையுமாகிய தெய்வ வியல் நாறும் நிகழ்ச்சிகளை அறிய அறிய மிக்கதோர் விம் மிதம் பயப்பதாகும். இத் தவத் திருவினரது இறையின் பத்துச் சுட ரொளியை உணர்ந்து அருணிலைக் கண்ணின்ற போத்தியா ரென்னும் பொய்யில் புலவர்,

நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
யெனைப் பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணித

லதனினு மருட்கை யுடைத்தே பிற னாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
யிசை மரபாக நட்புக் கந்தாக
வினையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையு
மதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே (புறம். 217)

என வியந்து தவ முதல்வரைப் பாராட்டியது சிந்தித்தற் குரிய அருமைப் பாடுடைத்து. இத் தகையவாறு அன்பு-அருள் நிலை விழுப்பம் வாய்ந்த தவப் பேறும் பண்பு முடையார் நரை மரண மூப்பறியாது, உலக நலன் கருதி உடலம் தாங்கினவ ராதலால், அவர்தம் பிறப்பு, சிறப் புடைய தாயிற் றென்க. எனவே? அழுக்காறு, அவா, வெகுளி, காழ்ப்பு, முனைப்பு முதலியவற்றால் எற்றுண்டு, வினைக் கீடாக மண்ணிலே பிறந் திறந் துழல்வது இழி தகு பிறப் பாகு மென்பது பெறப்படுகிறது.

எனவே, இதுகாறுங் கூறியவாற்றால், மக்களுக்குள் பாகுபாடு காலமும் இடனும் பற்றி வேறுபடு மென்றும், சாதி யுணர்வு உயிரோடு செல்லும் வினைப் பயன் போலல் லாது உடலோடு அழியு மாதலான், அச் சாதியுணர்வினான் பயன் யாது மின் றென்பதும், மக்களது பெருமையும் ஐயந் திரிபற அறிய லுறுவார்க்கு முடிந்த கருவி அன்னார் உளம், உரை, வினை யென்பதூஉம், யாக்கையினைப் பெற்று அதன் பயனுறுதல் யாவருக்கும் ஒத்ததினான் பிறப் பொக்கு மென் றும், பெருமை சிறுமைக்குக் கட்டளை கல்லாகிய மன வேறுபாடுகளும் தொழிற் பாகுபாடுகளும் யாக்கை தோறும் வேறுபடுதலான சிறப் பொவ்வா என்பதும், பெருமையாவது குலத்தினால் அறியப்படா தென்பதூஉம், பிறப்பினால் வேறுபாடின்றிப் பிறப் பொத்த தோற்றத்தை யுடைய மக்க ளனைவரும் மன வுணர்வுடன் இறை யருள் பெற்றுப் பிறப் பிறப்புத் துன்பத்தை ஒழிக்கும் சிறப்புறு வினை யியற்றி ஒப்பில் உயர் வடைதல் நேரிய தென்பதும் அறியப் பெற்றாம். மற்றும் இறை மணங் கமழ உயிர்க்கு உண்டி கொடுத்து, பலனை எதிர்பாராமலே உயிர்கள் பால் வேறுபாடின்றி இடையறாது தொண்டின் மூலம் அன்பு பாராட்டி உதவுதலும், வேண்டிய வேண்டியாங்

செய்த தவ மியற்றலும், பிறப்பா லெய்தும் சிறப்பாகு மென்பதூஉம் கருக் கொண்டு துணியப்படலாயிற்று.

உண்மையான் ஆயுங்காலை, பிறப்பின் விழுத்தகு சிறப்பும், அதனு லுறும் மாண் பயனும் பிறவியிற் பெறும் பேரின்பத்தைத் தழுவி நிற்கும் தகைமை யுடையன வாதலான், வாய்த்த பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சான்றது. பிறப்பின் சிறப்பு, செம் பொருளைச் சார்ந்திருக்க வேண்டு மாதலால், உள்ளத் துண்மை யுணர்ந்தார் ஒன்றை விரும்புங்கால், பிறவாமையே விரும்புவார். ஏனெனில், புன்மைசேர் பற்றால் எழும் பிறப்பினை ஒழித்தலே இன்ப விண்ணுகும். 'வேண்டுங் கால் வேண்டும் பிறவாமை' என்றார் வள்ளுவர். பிறவா மையை நாடுவது இறை யருள் நற் பேற்றின்பத்திற் காகினும், அவ் வீட்டின் பேறு பெறவும் கடவு ளறமும் கை கூடவும் இப் பிறப்பு இன்றி யமையாத தென்க. சற்றுச் சிந்தித் துணரின், பிறப் பொழிந்து பெற நிற்பது யாது மின்மையின், இப் பிறப்பு, வீட்டிற்கு மேலாம் சிறைபெறு இன்பச் செல்வத்தை நல்கும் பான்மைத்து. பலருக்கும் பயனுகும்படி இச் செல்வத்தை வையகத்தில் வழங்கவே, பிறவி மாண்புற்று பயன் பெறும். எனவே, பாழ்த்த இரு வினைப் பயன்களை நுகரற் பொருட் டெழாத பிறப்பினை வேண்டும் சிறப்பு பெரிதும் வேண்டற் பால தாகும். இத்தகைய வீடும் வேண்டா விறலின் திறனும், உய்யும் நெறியும் மெய்யாக உணர்ந்தார்க் கன்றி, துயரக் கூட்டில் மெய் யுணர்விலாது மயங்கும் திருவிலிகளுக்குப் புலப்படுவது அரிது. பேதைமை நீங்கிய பிறப்பினது சிறப் புணர்ந்தார், யாதொன்றையும் வேண்டாது, மேதக்க இறை யன்பு ஒன்றினையே மேவுதல் வேண்டு மென்ற உள்ளத் துணர்வில் பெரிதும் அழுந்தி இப் பிறப்பிலே பேரின்பம் துய்ப்பர். உடலுடையார்க்கு இறப்பு எவ் வகையினும் தவிர்க்கொணுதலான், பிறப்பின் சிறப் பினையும் இறை கழற் கண் மறவாத மாண்பினையும் வேண் டுவது மக்களுக் குற்ற தலையாய கடன்மையா மெனக் கருதுக. எனவே, ஒத்த பிறப்பினையுடைய மக்களுளே, பிறப்பின் சிறப்பினை விழைவார் தம் மியல்பு இறை பணி யும் உயிர்ப் பணியும் செய்து கிடப்ப தென்பது உணர்த்தப் பட்டது காண்க.